## உங்கள் குழந்தைகள் பேசுவது விளங்கவில்லை என்றால் என்ன செய்யவேண்டும்?

1. நீங்கள் கேட்கும் கேள்விகளை சற்று வேறுபட்ட விதத்தில் கேளுங்கள். சில தெரிவுகளைக் கொடுங்கள். உங்கள் கேள்வி, "என்ன பிள்ளைக்கு சாப்பிடவேண்டும்?" என்றால், அதை சற்று வேறுபட்ட விதத்தில், "பிள்ளைக்கு காரட் சாப்பிடவேண்டுமா அல்லது ரொட்டி வேண்டுமா?" என்று கேளுங்கள்.

2. கூடுதல் விவரங்களை எடுக்க முயலுங்கள். (எ.கா) "விளையாட்டுப்பொருளா? எந்த அறைக்குள் அது இருக்கின்றது?"

3. உங்கள் குழந்தை எப்பொருளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறதோ அப்பொருளை உங்களுக்குக் காட்டுமாறு கேளுங்கள்.

4. ஆம், இல்லை என்று பதில் தரக்கூடிய கேள்விகளைக் கேளுங்கள். (எ.கா) பழச்சாறு வேண்டுமா?

5. வார்த்தைகளைச்சேருங்கள். (எ.கா) உங்கள் குழந்தை "சா" என்று கூறினால், உடனே நீங்கள் "சாப்பிடப்போறீங்களா?" என்று கேளுங்கள்.

6. உங்கள் குழந்தை என்ன கூறவிரும்புகிறது என்பதை உற்றுக்கவனியுங்கள். குழந்தையின் முகமாற்றங்கள், மற்றும் நடவடிக்கைகளைக் கவனியுங்கள். (எ. கா) உங்கள் குழந்தை தனது வயிற்றைப்பிடித்துக்காட்டினால் தனக்கு உடல் சரியில்லை என்று உங்களுக்குக் கூற முனையலாம்.

7. நீங்கள் என்ன செய்கிறீர்கள், உங்களைச்சுற்றி என்ன பொருட்கள் உள்ளன, நீங்கள் எந்த அறையில் உள்ளீர்கள் என்ற எல்லாவற்றையும் பற்றி உங்கள் குழந்தையிடம் பேசிக்கொண்டே இருங்கள்.

8. உங்கள் குழந்தை கூறுவது சிலவேளைகளில் மட்டும் விளங்காவிடின் அது சிக்கல் இல்லை.